அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 337

அரசாங்க நிருவாக அமைச்சு.
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1986, ஜூலை 28

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

சட்டத்துறை அதிபதியின் மதியுரை அல்லது அபிப்பிராயம்

---

தாபன விதிக் கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்தின் பிரிவு 1 "சட்டத்துறை அதிபதியின் மதியுரை அல்லாத அபிப்பிராயம்" இன், குறிப்பாக பிரிவு 1.1 இன், ஏற்பாடுகளுக்கு தங்களின் கவனத்தை ஈர்க்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. பார்வையிடல் வசதிக்காக அவ்வுப பிரிவு ஈண்டு தரப்படுகிறது.

"When the advice or opinion of the Attorney-General is sought, the point on which such advice or opinion is sought should be stated precisely. He should be furnished with a full and complete statement of the facts of the case together with references to the relevant pages of any office file that is forwarded.

If he has been consulted before on the same question references should be quoted to any previous opinions given by him."

02. சட்டத்துறை அதிபதியுடன் தொடர்பு கொள்கையில் பல சந்தர்ப்பங்களில் இப்பிரிவு ஏற்புடைய ஏற்பாடுகள் யாவற்றுக்கும் அமைவுறுவதற்கு உரிய கவனம் செலுத்தப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக சட்டத்துறை அதிபதியும் அவரது உத்தியோகத்தர்களும் பல விடயங்கள் பற்றித் தெளிவு பெறுவதற்காக சட்டத்துறை அதிபதியின் மதியுரையை நாடுவோருடன் கடிதத் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டி இருந்துள்ளது. இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முறைப்படி அமைந்து ஒழுகியிருப்பின் அத்தகைய தேவை ஏற்பட்டிருக்காது.

03. ஆதலின், சட்டத்துறை அதிபதியின் மதியுரையை நாடும் போது தாபன விதிக் கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்தின் 1ஆம் பிரிவின் தேவைகளைக் கவனமாக வாசித்து அவற்றுக்கு அமைந்து ஒழுகுவதற்கான தேவை குறித்து சகல உத்தியோகத்தர்களதும் கவனத்தை ஈர்க்குமாறு வேண்டிக் கொள்கிறேன். மதியுரையை நாடுபவர் விரைவாக மதியுரையைப் பெற்று விரைவாக அவரின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அவரின் நலன் பொருட்டு அவ்வாறு செய்ய வேண்டுமென்பது வலியுறுத்தப்படுதல் வேண்டும்.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.